STATEMENT SHOWING EXISTING PROVISION AND PROVISION AS AMENDED

| Existing provision | Regulation as Amended |
|---|---|
| **4. Charges recoverable by the Licensee-**<br>The charges, recoverable by the Licensee from the consumers are: -<br>(1)Tariff related charges, namely,—<br>(i) xxxxxxxx<br>***(New provision:)*** | **4. Charges recoverable by the Licensee-**<br>The charges, recoverable by the Licensee from the consumers are: -<br>(1)Tariff related charges, namely,—<br>(i) xxxxxxxx<br>(i-a) The wheeling charges / Network charges shall be payable by the HT / LT consumer category in accordance with the rates as the Commission may fix time to time for different category of consumers (to recover the cost incurred by the Licensee for its Distribution wire business).<br>*Provided that the Wheeling charges / Network charges may be denominated in terms of Rs./kWh (or) Rs./kVAh (or) Rs./kW/month (or) Rs./kVA/month for the purpose of recovery from the Distribution network user, or any such denomination as may be stipulated by the Commission.* |

(By Order of the Tamil Nadu Electricity Regulatory Commission)

Chennai-600 032,
28th May 2021.

S.CHINNARAJALU,
*Secretary,*
*Tamil Nadu Electricity Regulatory Commission.*

**2004ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்வழஙகல் விதித்தொகுப்பிற்குரிய திருத்தம்**

**(அறிவிக்கை எண். தமிஒஆ/வவி/7–45, 26.05.2021** நாளிட்டது)

2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 50ஆம் பிரிவுடன் சேர்த்துப்படிக்கப்படும் 181 ஆம் பிரிவினால் வழங்கப்பட்ட அதிகாரங்களையும், இதன் பொருட்டு இயல்விக்கும் அனைத்துப்பிற அதிகாரங்களையும் செலுத்தி தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், இதன் மூலம் தமிழ்நாடு மின்வழங்கல் விதித்தொப்பில் பின்வரும் திருத்தங்களை செய்கிறது. அதன் வரைவு, மேற்சொன்ன 181ஆம் பிரிவின்(3) ஆம் உட்பிரிவின்படி வேண்டுறுத்தப்பட்டவாறு முன்னதாக வெளியிடப்பட்டது.

அது *தமிழ்நாடு அரசிதழில்* வெளியிடப்பட்ட நாளன்று நடைமுறைக்கு வரும்.

**திருத்தம்**

மேற்சொன்ன தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பில் 4 ஆம் ஒழுங்குமுறை விதியின் (1) ஆம் உள் ஒழுங்குமுறை விதியில் (i) ஆம் இனத்திற்கு பின்பு பின்வரும் இனம் புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

"(i அ) மின்சாரம் கொண்டு செல்லுதல் கட்டணங்கள் /மின் வலையமைப்பு கட்டணங்கள், (தன்னுடைய மின் பகிர்மான மின்தொடர் வணிகத்திற்காக (ருசைந ரெளனைநேளள) உரிமம்தாரரால் செய்ய நேர்ந்த செலவை வசூலிப்பதற்காக) பல்வகை மின்நுகர்வு வகையினருக்காக அவ்வப்போது ஆணையம் நிருணயிக்கலாகும் வீதத்திற்கிணங்க உயர் அழுத்த / தாழ்வழுத்த மின் நுகர்வோரின் வகையினரால் செலுத்தப்பட வேண்டியதாகும்:

வரம்புரையாக மின்சாரம் கொண்டு செல்லுதல் கட்டணங்கள் / மின்வலையமைப்புக் கட்டணங்களானது மின்பகிர்மான பயன்படுத்துநரிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு ரூ./ கிலோவாட் மணி அல்லது ரூ. / கிலோவோல்ட் ஆம்பியர் மணி அல்லது ரூ./ கிலோவாட் / மாதம் அல்லது ரூ./கிலோவோல்ட் ஆம்பியர் / மாதம் என்ற வரம்புரைகளில் குறித்துக் கூறப்படலாம்."

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

சென்னை–600 032,
2021 மே 28.

சு. சின்னராஜலு,
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

**விளக்கவுரை**

2005ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (மின்கட்டண வீதத்தினை நிர்ணயம் செய்வதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள்) ஒழுங்குமுறை விதிகளின் வகைமுறைகளின்படி மின் பகிர்மான உரிமம்தாரர், தன்னுடைய மின் தொடர் வணிகம் மற்றும் சில்லறை மின் வழங்கல் ஆகியவற்றிற்காக தனித்தனியாக தன்னுடைய கணக்குகளை பராமரித்தல் வேண்டும்.

2. இந்திய அரசின் மின் கட்டண கொள்கையானது, சில்லறை மின் கட்டணத்தின் பேரில் வற்புறுத்துவது மின்சாரத்தை போட்டி விலையில் கொள்முதல் செய்கையில் மின் பகிர்மான நிறுவனங்களின் தொடர்புடைய திறனை வெளிப்படுத்துதல் வேண்டும். அது, மின்பகிர்மான வலையமைப்பிற்கான நேர்த்தி செய்யப்பட்ட செலவுத் தொகைகளை பொருத்தமான தலைப்பிலுள்ள கட்டணங்களின் வாயிலாக வசூலிக்கப்படுதல் அவசியமானதாகும்.

3. ஆகையால் ஆணையத்தால் தீர்மானிக்கப்படும் மின் பகிர்மான தொடர் வணிக செலவு தொகையானது, தனிப்பட்ட தலைப்பின் கீழ் வசூலிக்கப்படுதல் வேண்டும் என்று உத்தேசிக்கப்பட்டுள்ளது. அத்தகைய கட்டணங்கள், அதனுடைய மின்பகிர்மான மின்தொடர் வணிகம் பொறுத்து அவ்வப்போது ஆணையத்தினால் நிர்ணயிக்கப்படும் வீதத்தில் உயர்அழுத்த / தாழ்வழுத்த மின்நுகர்வோர் வகையினர் அனைவருக்கும் பொருந்தத்தக்கதாகும்.

இந்த திருத்தம் மேலேயுள்ள செயற்குறிப்பிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

சென்னை–600 032,
2021 மே 28.

சு. சின்னராஜலு,
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

**இருந்துவரும் வகைமுறை மற்றும் திருத்தத்தை உள்ளடக்கிய வகைமுறை இவற்றை காட்டும் விவரவுரை**

| இருந்துவரும் வகைமுறை | திருத்தத்தை உள்ளடக்கிய வகைமுறை |
|---|---|
| 4. உரிமம்தாரரால் வசூலிக்கத்தக்க கட்டணங்கள்:<br>மின்நுகர்வோரிடமிருந்து உரிமம்தாரரால்<br>வசூலிக்கத்தக்க கட்டணங்கள்:–<br>(1) மின்கட்டணம் தொடர்பான கட்டணங்க அவையாவன:–<br>(i) ******<br>(புதிய வகைமுறை) | 4. உரிமம்தாரரால் வசூலிக்கத்தக்க கட்டணங்கள்:<br>மின்நுகர்வோரிடமிருந்து உரிமம்தாரரால்<br>வசூலிக்கத்தக்க கட்டணங்கள்:–<br>(1) மின்கட்டணம் தொடர்பான கட்டணங்கள் அவையாவன:–<br>(i) ******<br>(i அ) மின்சாரம் கொண்டு செல்லுதல் கட்டணங்கள் / மின் வலையமைப்புக் கட்டணங்கள், (தன்னுடைய மின் பகிர்மான மின்தொடர் வணிகத்திற்காக (Wire business) உரிமம்தாரரால் செய்ய நேர்ந்த செலவை வசூலிப்பதற்காக) பல்வகை மின்நுகர்வு வகையினருக்காக அவ்வப்போது ஆணையம் நிருணயிக்கலாகும் வீதத்திற்கிணங்க உயர் அழுத்த / தாழ்வழுத்த மின் நுகர்வோரின் வகையினரால் செலுத்தப்பட வேண்டியதாகும்:<br>வரம்புரையாக மின்சாரம் கொண்டு செல்லுதல் கட்டணங்கள்/ மின் வலையமைப்புக் கட்டணங்களானது மின்பகிர்மான பயன்படுத்துநரிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு ரூ./ கிலோவாட் மணி அல்லது ரூ. / கிலோவோல்ட் ஆம்பியர் மணி அல்லது ரூ./ கிலோவாட் / மாதம் அல்லது ரூ./கிலோவோல்ட் ஆம்பியர் / மாதம் என்ற வரம்புரைகளில் குறித்துக் கூறப்படலாம். |

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

சென்னை–600 032,
2021 மே 28.

சு. சின்னராஜலு,
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

PRINTED AND PUBLISHED BY THE COMMISSIONER OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU